

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 228 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 16 – திங்கள்கிழமை 30 மார்ச் 2026 – கோவை★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 228 : Thiruvalluvar Year - 2057 - Panguni 16 - Monday 30 March 2026 - Kovai★★ 12 Pages ₹ 5.00





கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (28.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில், 2026 சட்டமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் – நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ. ராசா, கனிமொழி கருணாநிதி, அமைச்சர் மு.பெ. சாமிநாதன், கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

## சட்டமன்றத் தேர்தல் – 2026: கழக வெற்றி வேட்பாளர்கள் அறிவிப்பு!

# கொளத்தூரில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் போட்டி!

## காட்பாடி – துரைமுருகன், திருச்சி மேற்கு – கே.என்.நேரு, ஆத்தூர் – இ.பெரியசாமி, சேப்பாக்கம் – உதயநிதி ஸ்டாலின்!



சென்னை, மார்ச் 30–

2026 – சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழகத்தின் வெற்றி வேட்பாளர்கள் பட்டியலை நேற்று முன்தினம், கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். அதுபோது, கொளத்தூர் தொகுதியில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் போட்டியிடுகிறார். அதேபோன்று காட்பாடியில் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்களும், திருச்சி மேற்கில் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அவர்களும், ஆத்தூரில் கழக துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ.பெரியசாமி அவர்களும், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணியில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் போட்டியிடுகின்றனர்.

அதன் விவரம் வருமாறு:–






## திராவிட முன்னேற்றக் கழகம்

### 2026 – சட்டமன்றத் தேர்தல் வேட்பாளர் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | கன்னியாகுமரி | - ரெ.மகேஷ் பி.ஏ., பி.எல்., |
| 2. | நாகர்கோவில் | - எஸ். ஆஸ்டின் எம்.ஏ., |
| 3. | இராதாபுரம் | - மு.அப்பாவு |
| 4. | பாளையங்கோட்டை | - மு.அப்துல்வஹாப் பி.காம்., |
| 5. | திருநெல்வேலி | - சு.சுப்பிரமணியன் பி.இ., எம்.பி.ஏ., |
| 6. | ஆலங்குளம் | - முனைவர் பால்.மனோஜ் பாண்டியன் எம்.ஏ., எம்.எல்., பி.எச்டி |
| 7. | தென்காசி | - டாக்டர் கலை கதிரவன் எம்.பி.பி.எஸ்., |
| 8. | வாசுதேவநல்லூர் | - ஈ.ராஜா பி.காம்., பி.எல்., |
| 9. | கோவில்பட்டி | - கா.கருணாநிதி |
| 10. | ஒட்டப்பிடாரம் (தனி) | - பி.எம்.ராமஜெயம் பி.எஸ்.சி., |
| 11. | திருச்செந்தூர் | - அனிதா ராதாகிருஷ்ணன் |
| 12. | தூத்துக்குடி | - திருமதி கீதாஜீவன் எம்.காம்., பி.எட்., |
| 13. | விளாத்திகுளம் | - ஜி.வி.மார்கண்டேயன் பி.ஏ., பி.எல்., |
| 14. | முதுகுளத்தூர் | - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பி.எஸ்.சி., பி.எல்., |
| 15. | இராமநாதபுரம் | - காதர்பாசா (எ) முத்துராமலிங்கம் பி.ஏ., |
| 16. | பரமக்குடி (தனி) | - கே.கே.கதிரவன் பி.ஏ., பி.எல்., |
| 17. | திருச்சுழி | - தங்கம் தென்னரசு பி.இ. |
| 18. | அருப்புக்கோட்டை | - கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் |
| 19. | சாத்தூர் | - அ.கடற்கரைராஜ் |
| 20. | ராஜபாளையம் | - சௌ.தங்கப்பாண்டியன் |
| 21. | கம்பம் | - நா.ராமகிருஷ்ணன் எம்.ஏ., |
| 22. | போடிநாயக்கனூர் | - ஓ.பன்னீர்செல்வம் பி.ஏ., |
| 23. | ஆண்டிப்பட்டி | - ஆ.மகாராஜன் |
| 24. | திருமங்கலம் | - சேடப்பட்டி மு.மணிமாறன் |
| 25. | திருப்பரங்குன்றம் | - கிருத்திகா தங்கபாண்டி பி.இ., |
| 26. | மதுரை மேற்கு | - ரகு பாலாஜி பி.ஏ., பி.எல்., |
| 27. | மதுரை மத்திய | - முனைவர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் பி.டெக்., எம்.எஸ்., பி.எச்.டி., |

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்